9 நீதிபதிகளைக் கொண்ட அமர்வின் முத்திரை தீர்ப்பு!

சுரங்கங்கள் - கனிமங்கள் - குவாரிகளுக்கு வரி விதிக்கும் உரிமை மாநில அரசுக்கே உரியது!

தீர்ப்பினை வரவேற்று கி.வீரமணி அறிக்கை!

சென்னை, ஜூலை 28- சுரங்கங்கள் - கனிம நிலங்கள் - குவாரிகளுக்கு வரி விதிக்கும் உரிமை மாநில அரசுக்கே உரியது என்று உச்சநீதிமன்றத்தில் 9 நீதிபதிகளைக் கொண்ட அமர்வின் தீர்ப்பு - வரவேற்கத்தக்கது - மாநில உரிமைகளை உறுதிப்படுத்தக் கூடியது என்று திராவிடர் கழகத் தலைவர் தமிழர் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு :-

சுரங்கங்கள், கனிம நிலங்கள், குவாரிகளுக்கு வரி விதிக்க மாநில அரசுகளுக்கே முழு அதிகாரம் உள்ளது என்று உச்சநீதிமன்ற அரசமைப்புச் சட்ட அமர்வு தீர்ப்பளித்துள்ளது. சுரங்கம் மற்றும் கனிம நிலங்களை குத்தகைக்கு எடுப்பவர்கள், அரசுக்கு செலுத்தும் ராயல்டி தொகை என்பது வரி அல்ல. அது குத்தகைக் கட்டணம்தான் என்றும் உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்தியா சிமென்ட்ஸ் நிறுவனம் உச்சநீதிமன்றத்தில் வழக்கு!

தமிழ்நாட்டில் உள்ள சுரங்கத்தை இந்தியா சிமென்ட்ஸ் நிறுவனம் குத்தகைக்கு எடுத்து பயன்படுத்தி வந்தது. அதற்காக, தமிழ்நாடு அரசுக்கு அந்த நிறுவனம் ராயல்டி (உரிமைத் தொகை) வழங்கியது. ஆனால், அத்துடன் சேர்த்து தமிழ்நாடு அரசு 'செஸ்' வரியும் விதித்தது. இதையடுத்து, 'சுரங்கங்கள், கனிம நிலங்கள்மீது வரி விதிக்க மாநில அரசுக்கு உரிமை இல்லை. எனவே, தமிழ்நாடு அரசு விதித்த வரியை திரும்பப் பெற வேண்டும்' என்று உச்சநீதிமன்றத்தில் இந்தியா சிமென்ட்ஸ் நிறுவனம் வழக்குத் தொடர்ந்தது. தங்கள் பகுதிக்கு உட்பட்ட கனிம நிலத்தைப் பயன்படுத்த வரி விதிக்கும் அதிகாரம் தங்களுக்கு உண்டு என்று தமிழ்நாடு அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

உச்சநீதிமன்ற ஏழு நீதிபதிகளின் தீர்ப்பு!

கடந்த 1989 ஆம் ஆண்டு இந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் அமர்வு, 'சுரங்கங்கள், குவாரிகளை உள்ளடக்கிய நிலங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்குத்தான் உள்ளது. மாநில அரசுகளுக்கு இல்லை. குத்தகை எடுப்பவர்கள்தரும் ராயல்டியை மட்டுமே மாநில அரசுகள் பெற முடியும். ராயல்டி என்பதே வரிதான்' என்று தீர்ப்பு வழங்கியது.

ராயல்டி என்பது வரியா, குத்தகைக் கட்டணமா? கனிம நிலங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு இருக்கிறதா, இல்லையா? என்ற விவாதம் தொடர்ந்து நடந்து வந்தது. ஒன்றிய அரசும், பல்வேறு சுரங்க நிறுவனங்களும் மாநில அரசுகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் இல்லை என்று கூறி மனுக்களை தாக்கல் செய்தன.

இதுதொடர்பாக இது வரை 80 மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான ৯ நீதிபதிகள் கொண்ட அமர்வின் தீர்ப்பு!

கடந்த 2011 ஆம் ஆண்டில் 9 நீதிபதிகள் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வுக்கு இந்த வழக்கு மாற்றப்பட்டது. தலைமை நீதிபதி டி.ஒய். சந்திரசூட் தலைமையிலான 9 நீதிபதிகள் கொண்ட அரசமைப்புச் சட்ட அமர்வு இந்த வழக்கை விசாரித்து வந்தது.

இந்நிலையில், இந்த வழக்கில் நேற்றுமுன்தினம் (25.7.2024) தீர்ப்பு வழங்கப்பட்டது. தலைமை நீதிபதி உள்ளிட்ட 8 நீதிபதிகள் ஒருமித்த தீர்ப்பை வழங்கினர்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது:

"சுரங்கங்கள், குவாரிகளை உள்ளடக்கிய நிலங்களுக்கு வரி விதிப்பதை, நாடாளுமன்றத்தின் சுரங்கங்கள், கனிமங்கள் (மேம்பாடு, ஒழுங்குமுறை) 1957 சட்டம் (எம்எம்டிஆர்) வரை யறுக்கவில்லை. ஆனால், அரசமைப்புச் சட்டத்தின் 246 ஆவது பிரிவின்கீழ் சுரங்கங்கள், குவா ரிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரத்தை மாநில சட்டப்பேரவைகள் பெறுகின்றன. எனவே, எம்எம்டிஆர் சட்டத்தின் மூலம், மாநில அரசுகள் தங்கள் வரம்புக்குள் வரக்கூடிய சுரங்கங்கள், குவாரிகளுக்கு வரி விதிப்பதை கட்டுப்படுத்த முடியாது.

ராயல்டி என்பது வரியல்ல!

'மாநிலங்கள் பெறும் ராயல்டி என்பது வரிதான்' என்று கடந்த 1989 இல் உச்சநீதிமன்றத்தின் 7 நீதிபதிகள் அமர்வு வழங்கிய தீர்ப்புத் தவறானது. சுரங்கங்களை குத்தகைக்கு எடுப்பவர்கள், மாநில அரசுகளுக்கு செலுத்தும் ராயல்டி என்பது வரி அல்ல. அது குத்தகைக் கட்டணம்தான்."

இவ்வாறு தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

ஒரு நீதிபதி மாறுபட்ட தீர்ப்பு

நீதிபதி பி.வி.நாகரத்னா அம்மையார் மட்டும் மாறுபட்ட தீர்ப்பை வழங்கினார். 'சுரங்கங்கள், கனிம நிலங்களுக்கு வரி விதிக்கும் அதிகாரம் மாநில அரசுகளுக்கு இல்லை' என்று அவர் தீர்ப்பளித்தார். பெரும்பான்மை நீதிபதிகள் வழங்கிய தீர்ப்பே இறுதி செய்யப்பட்டது.

அண்மைக்கால தீர்ப்புகளில் சிறப்பான தீர்ப்பு!

இதுவரை கனிம நிலங்களை பயன்படுத்தியதற்கான வரி நிலுவையை மாநில அரசுகளுக்கு நிறுவனங்கள் செலுத்த வேண்டுமா அல்லது இனி வரும் நாட்களுக்குத்தான் இந்தத் தீர்ப்பு பொருந்துமா என்பது குறித்து வரும் 29 ஆம் தேதி விளக்கம் அளிக்கப்படும் என்று உச்சநீதிமன்றம் தெரிவித்துள்ளது.

அண்மைக்காலத்தில் உச்சநீதிமன்றத்தால் வழங்கப்பட்ட அரசமைப்புச் சட்ட அமர்வுகளின் தீர்ப்புகளிலேயே இத்தீர்ப்பு மிகவும் சிறப்பு வாய்ந்த தனி முக்கியத்துவம் பெற வேண்டிய முத்திரைத் தீர்ப்பாகும் (*A Landmark Judgement*).

காரணம், இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 7 ஆவது அட்டவணையில் உள்ள மூன்று பட்டியல்களின்கீழ் வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள்பற்றிய தெளிவுபடுத்தும், கூட்டாட்சித் தத்துவப்படி, மாநில அரசுக்குள்ள பறிக்கப்படக் கூடாத அதிகாரங்கள்பற்றி இது மிகவும் துல்லியமாகவே விளக்கும் தீர்ப்பாகவும் அமைந்துள்ளது.

அதோடு நாடாளுமன்றமே முன்வந்து ஒரு தனிச் சட்டமியற்றி, மாநிலத்திற்கென அரசமைப்புச் சட்ட கர்த்தாக்கள் அளித்துள்ள உரிமைகளைப் பறித்துவிட முடியாது; கூடாது என்ற சட்ட விளக்கம் இத்தீர்ப்பில் ஆணியடித்துக் கூறப்பட்டு ஒரு நல்ல முன்மாதிரியையும் தந்துள்ளது!

தமிழ்நாடு அரசு முன்பு தொடர்ந்த வழக்கே, இதன் தொடக்கப் புள்ளியாகும்.

மற்றொரு முக்கிய அம்சமும், சட்டத்தின் ஆட்சியில் இத்தீர்ப்பின் மூலம் சுட்டிக்காட்டப்பட்டு, உறுதி செய்யப்பட்டுள்ளது!

80 மேல்முறையீட்டு மனுக்கள்!

1989 ஆம் ஆண்டு இதே வழக்கை ஏழு (7) உச்சநீதிமன்ற நீதிபதிகள் கொண்ட அமர்வு விசாரித்து, மாநில உரிமைப் பறிப்புக்கு ஆதரவாக, "கனிம வளங்கள், சுரங்கங்கள், நிலக் குவாரிகளுக்கு வரி விதிக்கும் அதிகாரம் ஒன்றிய அரசுக்குத்தான் உள்ளது; மாநில அரசுகளுக்கு இல்லை. குத்தகைதாரர்கள் தரும் ராயல்டியை மட்டுமே மாநில அரசுகள் பெற முடியும்" என்று கூறியதைத் தலைகீழாக்கி விட்டது தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் அவர்கள் தலைமையில் அமைந்த 9 பேர் அடங்கிய புதிய அரசமைப்புச் சட்ட அமர்வு!

தீர்ப்பளித்த நீதிபதிகளில் ஒருவர் மட்டும் மாறுபட்ட கருத்தை ஒரு பகுதிக்குகூறியுள்ளபோதிலும், 8 நீதிபதிகள் கொடுத்த தீர்ப்பின்படி மாநில அரசுக்கு வரி போட உரிமை உண்டு என்பதும், வரி என்பது வேறு, ராயல்டி என்பது வேறு என்பதும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

80 மேல்முறையீட்டு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்ட பழைய வழக்கில், மீண்டும் 2011 இல் 9 நீதிபதிகள் கொண்ட அமர்வுக்கு மாறிய பிறகு (25.7.2024) தீர்ப்பு வழங்கினர்.

"மாநில அரசுகள் - மக்கள் நலத் திட்டங்களை செயல்படுத்திட போதிய நிதி ஆதாரங்கள் அவற்றுக்கு இருக்கவேண்டாமா?" என்று பொருள் பொதிந்த கேள்வியை உச்சநீதிமன்ற நீதிபதிகள் கேட்டுள்ளது - மிகவும் சரியான எதார்த்தத்தைப் புரிந்துகொண்ட ஒரு நேர்மைமிக்க கேள்வி.

குறிப்பிட்ட சில தீர்ப்புகள் எதிர்காலத்தில்கூட மாறும் என்பதற்கு அடையாளம்!

அந்தக் கனிம வளங்கள், சுரங்கங்கள், நிலக் குவாரிகளில் ஏதாவது பிரச்சினை என்றால், உடனடியாகத் தலையிட்டு, அவர்களைக் காப்பாற்றி, வழிநடத்தும் செயற்பாடு, மக்களை உண்மையிலேயே ஆளும் மாநில அரசுகளுக்கே உள்ள மறுக்கப்பட முடியாத உரிமையாகும்!

1989 ஆம் ஆண்டைய பழைய தீர்ப்பு இதன்மூலம் செல்லாததாக்கப்பட்டுள்ளது!

இதுபோல், இன்றைய சட்ட தீர்ப்புகள் பல - எதிர்காலத்தில் மாறும் என்பதற்கும் இது ஒரு முன்னோட்டமாகும்!

இவ்வாறு கி.வீரமணி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



காஞ்சிபுரம் மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் ஒட்டாந்தாங்கல் ஊராட்சி, அரசாணிமங்கலம் ஊராட்சி, பென்னலூர் ஊராட்சி, அம்மைப்பநல்லூர் ஊராட்சி, மேனலூர் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமினை காஞ்சி தெற்கு மாவட்ட செயலாளர் உத்திரமேரூர் சட்டமன்ற உறுப்பினர், சுந்தர் தொடங்கி வைத்து, மனுக்கள் பெற்றார். இதில் உத்திரமேரூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி.ஹேமலதா ஞானசேகரன், உத்திரமேரூர் ஒன்றிய செயலாளர் ஒன்றிய குழு உறுப்பினர் கெ.ஞானசேகரன், பேரூர் கழக செயலாளர் என்.எஸ்.பாரிவள்ளல், பேரூராட்சி தலைவர் சசிகுமார் , தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.நாகன், கவுன்சிலர் கலைச்செல்வி உமாபதி, இளைஞர் அணி துணை அமைப்பாளர் வ.கோபிநாதன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள், உடன்பிறப்புகள் துறை சார்ந்த அலுவலர்கள் பொதுமக்கள் கலந்து கொண்டு நிகழ்ச்சியினை சிறப்பித்தனர்..

நமது தேசியக் கொடியை இறக்குமதி செய்ய முடியுமா?

டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!

புதுடெல்லி, ஜூலை 28- சீனாவில் இருந்து இயந்திரங்கள் மற்றும் மின்னணு சாதனங்கள் இறக்குமதி செய்ய தடை செய்யப்பட்டிருக்கிறதா? மற்ற பொருட்களை எவ்வளவு மதிப்பிற்கு சீனாவிலிருந்து இறக்குமதி செய்கிறோம்? எந்த நாட்டிலிருந்தும் இதையெல்லாம் இறக்குமதி செய்யக் கூடாது என்று தடை செய்யப்பட்ட பொருட்கள் உண்டா? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.

இதற்கு ஒன்றிய வர்த்தகம் மற்றும் தொழில்துறை இணையமைச்சர் ஜிதின் பிரசாதா அளித்த பதில் வருமாறு:-

சீனா மற்றும் தைவானில் இருந்து எந்தப் பொருட்களையும் இறக்குமதி செய்யக்கூடாது என்று எந்தத் தடையும் விதிக்கப்படவில்லை. நம் நாட்டின் தொழில் மற்றும் வர்த்தகத்திற்கு எவையெல்லாம் தேவையோ அதை இந்நாடுகளில் இருந்து இறக்குமதி செய்து கொள்ள எந்தத் தடையும் இல்லை.

கடந்த 2023-24-ஆம் நிதியாண்டில் சீனாவில் இருந்து மட்டும் 8.42 லட்சம் கோடி ரூபாய் அளவுக்கு பொருட்களை இறக்குமதி செய்திருக்கிறோம். இது இந்தியாவின் மொத்த இறக்குமதியில் 15 சதவீதமாகும்.

எதையெல்லாம் இறக்குமதி செய்யலாம் என்று கேள்வி வரும்போது, கட்டுப்படுத்தப்பட்டவை, தடை செய்யப்பட்டவை என இரண்டு வகை இருக்கிறது. கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களை உரிய அதிகார அமைப்புகளிடம் இருந்து உத்தரவு அல்லது அனுமதி பெற்ற பின்பே இறக்குமதி செய்ய வேண்டும்.

தடை செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்ட பொருட்களை உலகின் எந்த நாடுகளில் இருந்தும் எந்தச் சூழலிலும் இறக்குமதி செய்ய முடியாது.

அந்த வகையில், பிரதானமாக நமது நாட்டின் தேசியக் கொடி இருக்கிறது. எந்த அளவானாலும், மூன்று மடங்கு நீளம், இரண்டு மடங்கு உயரம் அல்லது அகலம் கொண்டதாகவும், செவ்வக வடிவிலும் இருக்க வேண்டும், குறைந்த பட்ச அழகு ஒப்பனை செய்யப்பட்டதாக தேசியக் கொடி இருக்க வேண்டும் என்ற அடிப்படை விதிகளை கடைபிடிக்காமல் தயாரிக்கப்படும் தேசியக் கொடியை எங்கிருந்தும் இறக்குமதி செய்ய முடியாது.

வாடகைத் தாய் மற்றும் செயற்கை கருத்தரிப்பு தொடர்பான சட்டங்களின்படி கருமுட்டை மற்றும் இனப்பெருக்க செல்களை எங்கிருந்தும் இறக்குமதி செய்ய முடியாது.

எலெக்ட்ரானிக் சிகரெட் உட்பட அதே போன்று செயற்கை புகையை உண்டாக்கும் எந்த சாதனத்தையும் இறக்குமதி செய்ய முடியாது. அதேபோல, ஜன்னலிலோ மேற்கூரையிலோ பொருத்துவது உட்பட எந்த மாதிரியான குளிர்சாதன இயந்திரங்களையும் இறக்குமதி செய்ய முழுமையான தடை இருக்கிறது.

ஆளில்லாத விமானங்களையும் எந்த நாட்டிலிருந்தும் எவரும் இறக்குமதி செய்ய முடியாது.

ஆனால், கால மாற்றத்திற்கேற்பவும், நாடுகளுக்கிடையே பரஸ்பர வர்த்தகத்தை ஊக்குவிக்கவும் கட்டுப்படுத்தப்பட்ட பொருட்களின் பட்டியல் அவ்வப்போது திருத்தப்பட்டு எளிதில் சில பொருட்களை இறக்குமதி செய்ய ஒன்றிய அரசு அவ்வப்போது மாற்றங்களைச் செய்கிறது.

அந்த வகையில் கடந்த ஐந்தாண்டுகளில், பாமாயில் மற்றும் அதன் மூலம் கிடைக்கும் பொருட்கள், வெள்ளி போன்றவற்றை எளிதாக இறக்குமதி செய்ய வழிவகை செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறு ஜிதின் பிரசாதா தெரிவித்தார்.

தமிழ்நாட்டை வஞ்சித்த ஒன்றிய பாசிச பா.ஜ.க. அரசைக் கண்டித்து

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்!

டி.ஜெ.கோவிந்தராஜன் எம்.எல்.ஏ. தலைமையில் பெருந்திரளானோர் பங்கேற்பு!

திருவள்ளூர், ஜூலை 28- கழகத் தலைவர் தமிழக முதல்வர் அவர்களின் அறிவுறுத்தலின்படி ஒன்றிய நிதிநிலை அறிக்கையின் தமிழ்நாட்டை வஞ்சித்த பாசிச பா.ஜ.க. அரசை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் பொன்னேரி பேரறிஞர் அண்ணா சிலை அருகில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளரும், கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் தலைமையில் நடைபெற்றது.

பொன்னேரி நகர செயலாளர் வழக்கறிஞர் ஜி. ரவிக்குமார், பொன்னேரி நகரமன்ற தலைவர் டாக்டர்.பரிமளம்விஸ்வநாதன் வரவேற்புரையாற்றினர்.

ஒன்றிய பாசிச - பா.ஜ.க. அரசைக் கண்டித்து தொண்டர்கள் முழக்கமிட்டனர் .

கண்டன ஆர்ப்பாட்டத்தில் இ.ஏ.பி.சிவாஜி, மு.பகலவன், ஜெ.மூர்த்தி, கே.வி.ஜி.உமாமகேஸ்வரி, எம்.எல்.ரவி, எஸ்.ரமேஷ், ஏ.வி.ராமமூர்த்தி, பா.செ. குணசேகரன், பி.வெங்கடாசலபதி, கே.சுப்பிரமணி, கே.ஜி.பாஸ்கர் சுந்தரம், வெ.அன்புவாணன், கன்னிகை ஜி.ஸ்டாலின், ஒன்றிய கழக செயலாளர்கள் மு.மணிபாலன், பா.சுகுமாறன், எம்.எஸ். கே.ரமேஷ்ராஜ், டி.கே.சந்திரசேகர், நா.செல்வசேகரன், கே.வி.ஆனந்தகுமார், கா.சு.ஜெகதீசன், ஆ.சத்தியவேலு, ந.பரிமளம், ஜான்(எ)பொன்னுசாமி, அத்திப்பட்டு ஜி.ரவி,

பேரூர் செயலாளர்கள் க.சு.தமிழ்உதயன், பி. முத்து, இரா.அறிவழகன், கே.வி.லோகேஷ், ஜெ. மோகன்பாபு, எம்.முரளிதரன், டி.சங்கர், செ.யுவராஜ், இரா.கதிரவன், மு. பாஸ்கரன், என். கிருஷ்ணமூர்த்தி, ஜி.பி. வெங்கடேசன், கே.ஆறுமுகம், பழவை.முகமது அலவி, கா.சம்பத், வி.பி. ரவிகுமார், பா.தனசேகர், எஸ்.கோபி, டி.மணி, டாக்டர்.வில்சன் நிலவழகன், எம்.ஆர்.ஸ்ரீதர், ஜி.சுமன், ஏ.கே.சம்பத்குமார், மு.தினகரன், எஸ். ரோஸ்பொன்னையன், ஜி.ரமேஷ், கே.ராஜேஷ், கோல்டு.பி.மணிகண்டன், தேசராணிதேசப்பன், ஜெயலலிதா சசிதரன், நா.மோகன்ராஜ், பூமிநாதன், எம்.கேசவன், எஸ். ராமஜெயம், பா.முத்துசாமி, அணி நிர்வாகிகள் டி.ஜெ.ஜி.தமிழரசன், எஸ். சேதுராமன், உ.விக்னேஷ் உதயன், டி.ஜானகிராமன், ஜெ.பிரதாப், ஆர்.யுவராஜ், மீ.வீ.கோதண்டன், சி.நாகராஜன், வாயலூர். கோபி, மீ.மு.ராமகிருஷ்ணன், டி.கே.பழனி, எம். முனிநாதன், டி.பிரபாகரன், எஸ்.ஏசுராஜன், என். நில்சன், யு.சந்துரு, எஸ். உதயகுமார், பி.சிவய்யா, வி.வி.சேகர், ராஜேஷ்,

ஜோதிமுருகன், வேலு, கஜேந்திரன், முனுசாமி, உமாகாத்தவராயன், வி.சுகன்யா, ரத்தினகுமாரி, ஏ.காமாட்சி, எ.நளாயினி, பத்மாசீனிவாசன், விஜயாமாலா பாஸ்கரன், எஸ்.ஜெயசித்ரா, இ.புஷ்பராணி, பி.அமுதா, ஏ. கோமளா, ஆர்.சுபாஷினி, ஏ.வெற்றிசெல்வி, எஸ். ரவிந்திரன், டி.எஸ். மோகன், பா.கருணகரன், ப. அறிவழகன், வி.காமராஜ், இ.சுரேஷ், எஸ். ராஜேந்திரன், டி.இளங்கோவன், ஜோசப், ஆ. ராஜா, ச.தியாகராஜன், எ.யுகேந்திரன், ஆர்.பார்த்தசாரதி, பி.சுதாகர், பி. கே.நாராயணசாமி, அரி, ஜெ.பாலசந்தர், எஸ்.எம். திருநாவுக்கரசு, எஸ்.பாபு, ச.விஜயகுமார், கே. ராஜேஷ், எஸ்.அசோக்குமார், ஏ.சீனிவாசன், எம். சுரேஷ், கே.மூர்த்தி, கே. சரவணன், மோ.பிரசாத், க.சு.தமிழ்பிரியன், ஆர். காண்டீபன், எஸ்.தேவராஜ், ஆர்.ரஞ்சித், ராபாட், மொய்தீன், தமீன்ஷா, ரகுமான்கான், அப்பாஸ், டாக்டர்.பாலமுருகன், எஸ்.சாந்தகுமார், பா.பரத்குமார், கார்த்திகேயன், ஆர்.கே.தினகரன், ராஜாராம், யோகேஸ்வரன், என்.எஸ்.ராஜீ, சலபதிகேசவன், சுரேஷ்சேகர், எம். எஸ்.முத்துகுமார், நந்தியம்.எஸ்.கதிரவன், ஈ.ஜி. பார்த்திபன், டாக்டர். மா.தீபன் உள்ளிட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் கழக முன்னோடிகள் ஏராளமானோர் பங்கேற்றனர்.

தமிழ்நாடு புதுச்சேரி வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் சார்பில் அதன் தலைவர் மாரப்பன் தலைமையில் ஒன்றிய பா.ஜ.க அரசை கண்டித்தும் மூன்று குற்றவியல் சட்டங்களை திரும்பப் பெற கோரியும் டெல்லி ஜந்தர்மந்தரில் நடைபெற்ற மாபெரும் கண்டன ஆர்பாட்டத்தில் கழக சட்டதிட்ட திருத்தக் குழுச் செயலாளர் வழக்கறிஞர் இரா.கிரிராஜன் எம்.பி. கண்டன உரையாற்றினார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அகில பார் கவுன்சில் துணை தலைவர் எஸ். பிரபாகரன் மற்றும் தமிழ்நாடு புதுச்சேரி வழக்கறிஞர்கள் கூட்டமைப்பின் நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

குளித்தலை 16வது வார்டு கழகச் செயலாளர்

ஏ.சுரேஷ் மறைவு!

கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, ஜூலை 28- கரூர் மாவட்டம், குளித்தலை நகராட்சி 16வது வார்டு கழகச் செயலாளரும் நகர்மன்ற உறுப்பினருமான ஏ.சுரேஷ் மறைவிற்கு கழகத் தலைவரும் முதல்வருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

முதல்வர் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு:

கரூர் மாவட்டம், குளித்தலை நகராட்சி, 16வது வார்டு கழகச் செயலாளரும், 16வது வார்டு குளித்தலை நகர் மன்ற உறுப்பினருமான ஏ.சுரேஷ் (வயது 53) அவர்கள் 27.07.2024 அன்று சனிக்கிழமை மதியம் 12.00 மணியளவில் மாரடைப்பு ஏற்பட்டு சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்பதை அறிந்து வருந்தினேன்.

அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தாருக்கும் கழகத் தோழர்களுக்கும் எனது ஆழந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது இரங்கல் செய்தியில் தெரிவித்துள்ளார்.